தினத்தந்தி 28 NOV 2024

### வேடசந்தூர் அருகே

## கிரானைட் நிறுவன கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ.28-

வேடசந்தூர் தாலுகா பிலாத்து கிராமத்தில் கிரானைட் நிறுவனம் தொடங்க சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு, பொதுமக்களிடம் கருத்து கேட்கும் கூட்டம் வருகிற 3-ந்தேதி தென்னம்பட்டி பரமசிவம் தங்கம்மாள் மண்டபத்தில் நடைபெற இருந்தது. இந்த கருத்து கேட்பு கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு இருப்பதாக கலெக்டர் பூங்கொடி தெரிவித்துள்ளார்.

தினகரன் 28 NOV 2024

# கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ 28: திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி தெரிவித்ததாவது:

வேடசந்தூர் வட்டம் பிலாத்து கிராமம் ஸிஸிறி குரூப்ஸ் மற்றும் எக்ஸ் போர்ட்ஸ், அழகு நிநி கிரானைட் அமைவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்துகேட்பு கூட்டம் கலெக்டர் தலைமையில் டிச.3ம் தேதி காலை 11.00 மணியளவில் வடமதுரை தென்னம்பட்டி கிராமம் பரமசிவம் தங்கம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற இருந்தது. இந்நிலையில் தற்போது நிர்வாக காரணங்களால் பொதுமக்கள் கருத்து கேட்கும் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தினமணி 28 NOV 2024

# தென்னம்பட்டி கருத்துக் கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ. 27: கிரானைட் சுரங்கம் அமைப்பது தொடர்பாக வடமதுரை அருகே டிச.3-ஆம் தேதி நடைபெற இருந்த கருத்துக் கேட்புக் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரையை அடுத்த பிலாத்து கிராமத்தில் கிரானைட் சுரங்கம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டறிய டிச.3-ஆம் தேதி கூட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தென்னம்பட்டியிலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற இருந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நிர்வாகக் காரணங்களால் ஒத்திவைக்கப்படுகிறது என்றார்.

மாலை மலர் 27 NOV 2024

# கருத்துகேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ. 27—

திண்டுக்கல் அருகே உள்ள பிலாத்து கிராமம் எக்ஸ்போர்ட்ஸ், கிரானைட் அமைவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்து கேட்டறிய மாவட்ட கலெக்டர் தலைமையில் வருகிற 3—ந் தேதி காலை 11 மணிக்கு தென்னம்பட்டி பரமசிவம் தங்கம்மாள் திருமண மண்டபத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற இருந்தது. ஆனால் அந்த கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் பூங்கொடி தெரிவித்துள்ளார்.